இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

71—

மின்மாற்றிகள்

***667—திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி தொகுதி, துலுக்கன்குறிச்சி, பனையடிப்பட்டி போன்ற கிராமப் பகுதிகளில் பழமைவாய்ந்த மின்மாற்றிகளை மாற்றி, புதிய மின்மாற்றிகளைப் பொருத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த துலுக்கன்குறிச்சி மற்றும் பனையடிப்பட்டி கிராமத்திற்கு, வெம்பக்கோட்டை துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. மேலும், மேற்படி இரண்டு கிராமங்களிலும் உள்ள மின்மாற்றிகளும் நல்ல நிலைமையில் இருப்பதால், புதுப்பிக்கவோ, வேறு மின்மாற்றியை அமைக்கவோ தேவையில்லை.

2006 ஆகஸ்ட் 23]

திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமப் பகுதிகளில் மாலை 4.30 அல்லது 5.00 மணிக்கு tube light-களை, on செய்தால்தான், இரவு நேரத்திலே அவை ஒளிர்கின்றன. 5.00 மணிக்குமேலோ அல்லது 6.00 மணிக்குமேலோ, அந்த tube light-களை அந்தக் கிராமப் பகுதிகளில் போட்டால், tube light-கள் எரிவதில்லை. காரணம் கேட்டால், மின் வாரிய ஊழியர்கள், transformer-ல் பழுது உள்ளது என்று அடிக்கடி கூறுகிறார்கள். எனவே, அவற்றை மாற்றித்தர அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே சில இடங்களிலே transformer-களிலே குறை இருப்பதைக் கண்டுபிடித்துதான், மின் வாரியத்தால் 14,000 புதிய transformer-கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, ஏற்கெனவே 4,000 transformer-கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. மீதியுள்ள 10,000 transformer-களை, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற இடங்களில் எல்லாம் பொருத்துவதற்கு வாரியம் ஏற்பாடு செய்யும்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் transformer-கள் அதிகமாகப் பழுதடைந்து, பழமையாக உள்ளன. இதை மாற்றித் தருவதாக அரசு அலுவலர்கள் கூறுகிறார்கள். இதுவரையில் அதற்கான ஏற்பாடுகள் எதுவும் கிடையாது. அதிக அளவில் transformer-கள் கெட்டுப் போயிருக்கின்றன. ஆகவே, அவற்றை மாற்றித்தர இயலுமா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டவுடன், முதற்கட்டமாக, 4,000 transformer-களை வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அந்த 4,000 transformer-களும் மாவட்டவாரியாகப் பிரித்து அனுப்பப்பட்டு, ஆங்காங்கே பொருத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப்போல, மேலும் பல இடங்களிலே புதிய transformer-கள் பொருத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதை மனதிலே கொண்டு, tender கோரப்பட்டிருக்கிறது. Tender முடிவு செய்யப்பட்டு, transformer-கள் வந்து சேர்ந்ததும், தமிழ்நாடு முழுவதும் இப்படிப்பட்ட குறைகளே இல்லாத அளவிற்கு மின் வாரியம் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும்.

[2006 ஆகஸ்ட் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மேகநாதன்.*

திரு. த.அ. மேகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியில், நெடுங்கல் கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்றுள்ளது. அந்தப் பள்ளியின் மைதானத்தில் மாணவர்கள் விளையாட முடியாதவகையில்* transformer *ஒன்று, மத்தியில் அமைந்துள்ளது. அதனை அரசு எடுத்து மாற்றியமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்த* transformer *ஐப் பொருத்தும்போதே. அந்தப் பள்ளி ஆட்சேபணை தெரிவித்திருக்குமானால், அந்த மையப் பகுதியிலே அதை நிறுவியிருக்கமாட்டார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தைப் பரிசீலனை செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரடியாக அந்தப் பள்ளிக்கு அனுப்பி, அது மையப் பகுதியிலே இருக்குமானால், மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

மின் விநியோகம்

***1678—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, புறநகர்ப் பகுதிகளில் மின் விநியோகத்தைச் சீரமைக்கக் கூடுதலாக மின்மாற்றிகள் மற்றும் மின் கம்பங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பாசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பெரம்பூர் மற்றும் வியாசர்பாடி பகுதிகளில் கூடுதலாக 6 மின்மாற்றிகள் அமைப்பதற்கும் மற்றும் 57 மின் கம்பங்கள்*